தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

17.09.2013

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது. காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழையில்லாததால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்து வருகிறது.

திங்கள்கிழமை அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 10,267 கன அடியாகக் குறைந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 18,715 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணைக்கு வரும் நீரின் அளவைவிட, காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால், ஞாயிற்றுக்கிழமை மாலை 114.32 அடியாக இருந்த நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 113.61அடியாகக் குறைந்தது. அணையின் நீர் இருப்பு 83.64 டி.எம்.சி.யாக இருந்தது.

**தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையில் ஒரு சில பகுதிகளில் செவ்வாய்க்கிழமை மழையோ அல்லது இடியுடன் கூடியோ மழையோ பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை கேரளம் மற்றும் தெலங்கானா பகுதிகளில் தீவிரமடைந்து உள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டின் சில பகுதிகளில் மழை பெய்து வருகிறது. செவ்வாய்க்கிழமையும் ஒரு சில இடங்களில் மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 95 டிகிரி

ஃபாரன்ஹீட்டாகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 79 டிகிரி ஃபாரன்ஹீட்டாகவும் இருக்கும்.

திங்கள்கிழமை காலை 8.30 மணி வரை, தமிழகத்தில் பதிவான மழை அளவு(மில்லி மீட்டரில்)

அரக்கோணம், ஸ்ரீபெரும்புதூர், வேதாரண்யம், பூந்தமல்லி -40, திண்டிவனம், போச்சம்பள்ளி, கோத்தகிரி, வாலாஜா -30, திருப்பத்தூர், பொன்னேரி, காவேரிப்பாக்கம் 20, ஏற்காடு, வால்பாறை, உதகமண்டலம், காஞ்சிபுரம், குளித்துறை, நாகர்கோவில் 10.

**கிருஷ்ணகிரி அணை தண்ணீர் வந்ததால் சாத்தனூர் அணையின் நீர்மட்டம் உயர்வு**

கிருஷ்ணகிரி அணையில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணைக்கு  திங்கள்கிழமை வந்தது. இதனால், சாத்தனூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்தது.

கர்நாடக மாநிலத்தில் தொடர் கன மழை பெய்து வருவதால், கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. எனவே, அணையில் இருந்து நொடிக்கு 3 ஆயிரம் கன அடி தண்ணீர் ஞாயிற்றுக்கிழமை திறந்துவிடப்பட்டது. தென்பெண்ணை ஆற்றின் வழியாக திறந்து விடப்பட்ட இந்த தண்ணீர் திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணைக்கு திங்கள்கிழமை வந்தது.

119 அடி உயரம் கொண்ட சாத்தனூர் அணையில் திங்கள்கிழமை காலை 70.15 அடி உயரத்துக்கு 859 மில்லியன் கன அடி தண்ணீர் தேங்கியிருந்தது. முதலில் 700 கன அடி வீதம் அணைக்கு தண்ணீர் வரத் தொடங்கியது. இது படிப்படியாக உயர்ந்து, பிற்பகல் 3 மணியளவில் நொடிக்கு 2,700 அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

இதையடுத்து, திங்கள்கிழமை மாலை சாத்தனூர் அணையின் கொள்ளளவு 859 மில்லியன் கன அடியில் இருந்து 939 கன அடியாக உயர்ந்தது. அதாவது, ஒரே நாளில் 80 மில்லியன் கன அடி தண்ணீர் அணைக்கு வந்து சேர்ந்துள்ளது.

அணையின் நீர்மட்ட உயரமும் 70.15 அடியில் இருந்து 71.65 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் மொத்த கொள்ளளவு 7,321 மில்லியன் கன அடி என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிருஷ்ணகிரி அணையில் இருந்து நொடிக்கு 3 ஆயிரம் கன அடி வீதம் ஞாயிற்றுக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**சென்னியம்மன் கோயிலுக்கு செல்லத் தடை!**

கிருஷ்ணகிரி அணையில் தண்ணீர் திறக்கப்பட்டதையடுத்து, திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணையைச் சுற்றியுள்ள மேல்பாச்சல், நீப்பத்துறை, மோத்தக்கல் கிராமங்களில் ஆற்றங்கரையோரம் உள்ள மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது. இப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டு இருந்தனர். திங்கள்கிழமை நீப்பத்துறை கிராமத்தின் தென்பெண்ணை ஆற்றில் அளவுக்கு அதிகமான தண்ணீர் வந்தது. இதனால், ஆற்றின் நடுவே உள்ள ஸ்ரீசென்னியம்மன் கோயிலைச் சூழ்ந்து கொண்டு தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. எனவே, இக் கோயிலுக்குச் செல்ல மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

திண்டிவனத்தை அடுத்த ஓமிப்பேர் கிராமத்தில் விவசாயிகளுக்கு இயந்திரம் மூலம் நெல் நடவு குறித்த செயல்விளக்கப் பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

வேளாண் உற்பத்தியினை அதிகரித்திட பண்ணை இயந்திரத்தின் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டபோது வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் அப்பகுதியைச் சேர்ந்த விவசாயி மணிபாலனின நிலத்தில் விவசாயிகளுக்கு இப்பயிற்சியினை அளித்தார்.

**வாழை நாரில் இருந்து விதவிதமான கைவினைப் பொருள்கள்**

மதுரை மாவட்டம், மேலக்கால் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பி.எம்.முருகேசன், குஜராத்தில் நடைபெற்ற சர்வதேச வேளாண் கண்காட்சியில் பங்கேற்று சிறப்பு விருதைப் பெற்றுள்ளார்.

குஜராத் மாநிலம், காந்திநகரில் செப்.9, 10 ஆம் தேதிகளில் இந்த கண்காட்சி நடைபெற்றது. இதில் மதுரை மாவட்டத்தில் இருந்து முன்னோடி விவசாயிகள் அண்டமான் கிராமத்தைச் சேர்ந்த பி.சோலைமலை (நெல்), டி.மேட்டுப்பட்டி சக்தி மணிகண்டன் (கரும்பு), சேடப்பட்டி வீரசிம்மன் (பருத்தி, கடலை), பி.எம்.முருகேசன் (வேளாண் கழிவுகளில் இருந்து மதிப்புக்கூட்டு பொருள்) பங்கேற்றனர்.

வாழை மட்டையில் இருந்து பை, கூடை, மிதியடி, திரைச்சீலை போன்ற மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களை முருகேசன் காட்சிப்படுத்தியிருந்தார். இக் கண்காட்சியில் சிறந்த வேளாண்சார் தொழில்முனைவோருக்கான விருது வழங்கப்பட்டுள்ளது. இது ரூ.50 ஆயிரம் ரொக்கத் தொகையுடன் உள்ளடக்கியது. மேலக்கால் கிராமத்தைச் சேர்ந்த முருகேசன், 2008 முதல் வாழைமட்டையில் இருந்து பல்வேறு பொருள்களைத் தயாரித்து ஏற்றுமதி செய்து வருகிறார். ஏற்கெனவே பல்வேறு மாநில அரசுகளின் விருதுகளைப் பெற்றுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

வேளாண் பல்கலைக்கழகம் நடத்திய கருத்தரங்கு ஒன்றில் வேளாண் கழிவுப் பொருள்களில் இருந்து மதிப்புக்கூட்டு பொருள்கள் தயாரிப்பது பற்றி விளக்கமளிக்கப்பட்டது. அப்போதுதான் வாழை மட்டை நாரை கயிறாகத் திரித்து பல்வேறு பொருள்களைத் தயாரிக்கும் எண்ணம் தோன்றியது. இதற்காக இரு இயந்திரங்களையும் வடிவமைத்து அதற்கான காப்புரிமையையும் பெற்றிருக்கிறேன்.

தற்போது சென்னையில் உள்ள ஏற்றுமதி நிறுவனம் மூலமாக, வாழை நாரில் தயாரிக்கப்பட்ட பை, கூடை, திரைச்சீலை, மிதியடி போன்ற பொருள்களை அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறேன். ஆரம்பத்தில் சிறிய அளவில் துவங்கிய இத் தொழில், தற்போது 40-லிருந்து 50 பேருக்கு வேலை கொடுக்கும் அளவுக்கு விரிவடைந்துள்ளது.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தாலும், உள்நாட்டில் இந்த தயாரிப்புகளுக்கு மக்களிடம் வரவேற்பு குறைவாகவே இருக்கிறது.

பிளாஸ்டிக் பொருள்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு இல்லாத வாழை நார் பொருள்கள் குறித்த விழிப்புணர்வு குறைவே இதற்கு காரணம் என்கிறார் முருகேசன்.

நெல், கரும்பு, வாழை விவசாயம் செய்துவந்த முருகேசன், 8-ம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ளார்.

**நத்தம்: வறட்சியால் பாதித்த  தென்னை, மாமரங்கள் கணக்கெடுக்கும் பணி**

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தாலுகாவில் பட்டு போன தென்னை மற்றும் மாமரங்கள் குறித்த கணக்கெடுக்கும் பணியை வருவாய்த் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தாலுகாவில் 22 வருவாய் கிராமங்கள் உள்ளன. கடந்த சில வருடங்களாக இப்பகுதியியில் போதிய மழை பெய்யாததால்

வறட்சியின் காரணமாக இங்குள்ள தென்னை மற்றும் மாமரங்கள் பட்டுப் போய் விட்டன. இதற்காக விவசாயிகள் அரசிடம் நிவாரணம் வழங்கக் கோரி வந்தனர்.

இந்நிலையில் அரசின் உத்தரவையடுத்து வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மற்றும் மாமரங்களை கணக்கெடுக்கும் பணியினை வருவாய்த் துறையினர் செய்து வருகின்றனர்.

இது குறித்து நத்தம் தாசில்தார் நாராயணனிடம் விசாரித்த போது, நத்தம் தாலுகா அளவில் வறட்சி காரணமாக முழுவதும் பட்டுப் போன தென்னை மரங்கள் மற்றும் மாமரங்கள் குறித்து அந்தந்த பகுதியில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்கள்  கணக்கெடுக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அருகிலுள்ள கிராம நிர்வாக அலுவலகங்களுக்குச் சென்று பாதிப்பு விவரங்களை உறுதி செய்து கொள்ளவேண்டும் என அவர் தெரிவித்தார்.

**செப். 20-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம் செப்டம்பர் 20-ஆம் தேதி நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் பங்கேற்று தங்களின் குறைகளை விவசாயிகள் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த ஆகஸ்ட்டில் நடைபெற்ற கூட்டத்தில் விவசாயிகள் அளித்த கோரிக்கை மனுக்களின் மீதான விவாதம் நடைபெற உள்ளது. எனவே, செப். 20-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெறும் கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று தங்களுக்கான பதில்களைத் தெரிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பாசனத்துக்குத் திறந்து விடப்பட்ட வைகை அணை நீர் நிறுத்தம்**

வைகை அணையில் இருந்து பாசனத்துக்குத் திறந்து விடப்பட்ட தண்ணீர் திங்கள்கிழமை முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

வைகை அணையில் இருந்து திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த பெரியாறு பாசன விவசாய நிலங்கள் 1,50,043 ஏக்கருக்கு கடந்த ஜூலை, 7-ஆம் தேதி முதல் 1,060 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. பின்னர் மழை பெய்ததால் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டது.

மழை அளவு குறைந்ததையடுத்து வழக்கம் போல் 960 கனஅடி தண்ணீர் பாசனத்துக்காக திறந்து விடப்பட்டது. இந்நிலையில் திங்கள்கிழமை காலை முதல் பாசனத்துக்காக திறந்து விடப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டது. வழக்கம்போல் மதுரை மற்றும் ஆண்டிபட்டி, சேடபட்டி கூட்டு குடிநீர் திட்டத்துக்காக 60 கனஅடி தண்ணீர் மட்டும் திறந்து விடப்பட்டுள்ளது.

இது குறித்து வைகை அணை முதன்மை செயற்பொறியாளர் மொக்கமாயன் கூறியது: திங்கள்கிழமை முதல் பாசனத்துக்காக திறந்து விடப்பட்டுள்ள நீர் நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் முறை வைத்து 3 நாள்கள் கழித்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்படும் என்றார்.

**கோவை மாவட்டத்தில் உணவு தானிய உற்பத்தி இலக்கு 80,000 மெட்ரிக் டன்**

கோவை மாவட்டத்தில் இந்த ஆண்டில் நெல், சிறுதானியங்கள் என உணவு தானிய உற்பத்தி இலக்கு 80,000 மெட்ரிக் டன் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த உற்பத்தி இலக்கை அடைவதற்கு ஏதுவாக விவசாயிகளுக்கு ரூ1.5 கோடி மானிய உதவிகளை அளிக்க வேளாண் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழகத்தில் வேளாண் துறையில் இரண்டாவது பசுமை புரட்சியை ஏற்படுத்த, அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. சுமார் 120 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்து செயல்பட்டு வருகிறது.

இதில் 2011-2012ல் மட்டும் இந்திய அளவில் 101.52 லட்சம் மெட்ரிக் உணவு தானிய உற்பத்தியை எட்டியது. குறிப்பாக அரிசி, சிறுதானியங்கள், பயறு வகைகளில் அதிக மகசூல் எட்டப்பட்டுள்ளது.

கேரளம், கர்நாடகத்தில் பெய்த பருவ மழை காரணமாக மேட்டூர் உள்ளிட்ட மாநிலத்தின் முக்கிய பாசன அணைகள் நிரம்பியுள்ளதால், இந்த ஆண்டில் உணவு தானிய உற்பத்தி இலக்கான 120 லட்சம் மெட்ரிக் டன்னை எட்ட அரசு திட்டமிட்டுள்ளது.

2013-2014ல் கோவை மாவட்டத்தில் சுமார் 80,000 மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அரிசி, சிறுதானியங்கள், பயறு வகைகளில் உற்பத்தி இலக்கை எட்ட கோவை மாவட்டத்திற்கு ரூ.1.5 கோடி மானிய உதவி வழங்கப்படும் என கோவை மாவட்ட வேளாண் துறை துணை இயக்குநர் முகமது இக்பால் தெரிவித்தார்.

நெல் உள்ளிட்ட உணவு தானிய பொருள்களின் உற்பத்தி இலக்கு (ஹெக்டரில்):

நெல் - 2,300. சோளம் - 3,000. மக்காச்சோளம் - 5,000. துவரை - 1000. உளுந்து - 1,500. பாசிப் பயறு - 2,000. கொள்ளு - 2,000. தட்டை - 5,000. கொண்டைக்கடலை - 1400.

கோவை மாவட்டத்தில் உள்ள 12 வட்டாரங்களில் இந்த உற்பத்தி இலக்கை எட்ட அதிகாரிகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக திருந்திய நெல் சாகுபடி, தீவிர சிறுதானிய சாகுபடி ஆகிய வேளாண் தொழில்நுட்பங்கள் மூலம் சாகுபடியைப் பெருக்கவும், விவசாயிகளுக்குப் போதிய தொழில்நுட்ப உதவி,

ஆலோசனைகள் தரவும் வேளாண் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சோளம், மக்காச்சோளத்திற்கு நூண்ணூட்ட சத்திடுதல், ஊட்டம் ஏற்றிய தொழு உரமிடுதல் ஆகியவற்றை விவசாயிகளுக்கு வேளாண் துறை அதிகாரிகள் அளிக்க உள்ளனர். புதிய தொழில்நுட்பங்கள், புதிய ரகங்கள் மூலம் உற்பத்தி இலக்கை எட்ட முடியும் என அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

**அமராவதி அணையில் நீர் திறப்பு:உழவுப்பணிகள் தீவிரம்**

அமராவதி அணையில் நீர் திறக்கப்பட்டுள்ளதையடுத்து தாராபுரம் பகுதியில் விவசாயிகள் உழவுப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அமராவதி அணையின் நீர்மட்டம் 87.60 அடியாக உள்ள நிலையில் அணைக்கு 289 கனஅடி நீர் வந்து கொண்டுள்ளது. முதல்வர் உத்தரவின் பேரில் அணையிலிருந்து புதிய மற்றும் பழைய அமராவதிப் பாசனத்திற்காக 1,449 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் தாராபுரம் தாலூாக்காவில் பழைய அமராவதிப் பாசனத்தில் 8,207 ஏக்கரும், புதிய அமராவதிப் பாசனத்தில் 9,400 ஏக்கரும் பாசன வசதி பெறும்.

அணையிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர், செவ்வாய் அல்லது புதன்கிழமை தாராபுரம் பகுதி வாய்க்கால்களுக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை தொடர்ந்து இரு பாசனப் பகுதிகளிலும் நெல் நடவிற்காக விவசாயிகள் உழவுப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். மேலும் 3 மாதங்களாக எவ்வித பயன்பாடுமின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிராக்டர்களின் தேவை தற்போது அதிகரித்துள்ளதால் வாடகைக்கு டிராக்டர் கிடைப்பதில் கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

**பவானிசாகர் அணைநீர்மட்டம் 79.16 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 79.16 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 500 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,563 கனஅடி

நீரும், வாய்க்காலில் 2,350 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 15.24 டி.எம்.சி.

**கோபியில் வாழைத்தார் ஏலம்**

கோபியில் ரூ.8.80 லட்சத்திற்கு வாழைத்தார்கள் ஏலம் போயின.

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் வாழைத்தார்கள் ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது. அதன் விவரம் வருமாறு: கதளி கிலோ ரூ.44, நேந்திரன் கிலோ ரூ.43, செவ்வாழைத் தார் ஒன்று ரூ.640, தேன்வாழை ரூ.600, ரொபஸ்ட்ரோ ரூ.420, பூவன் தார் ரூ.560, ரஸ்தாளி ரூ.380, மொந்தன் ரூ.280, பச்சை நாடன் ரூ.280-க்கும் அதிகபட்சமாக ஏலம் போயின. மொத்தம் 8 ஆயிரம் வாழைத்தார்கள் ரூ.8 லட்சத்து 80 ஆயிரத்திற்கு ஏலம் போயின.

தேங்காய் ஏலம்: தேங்காய் ஒன்று அதிகபட்சமாக ரூ.12, குறைந்தபட்சம் ரூ.6-க்கும் ஏலம் போயின. சராசரியாக தேங்காய் ஒன்று ரூ.9 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டது. மொத்தம் 5 ஆயிரம் தேங்காய்கள் ரூ.32 ஆயிரத்திற்கு ஏலம் மூலமாக விற்பனையாகின.

**"நிலக் கடலையை சுருள்பூச்சி தாக்குகிறது'**

எலச்சிபாளையத்தில் மானாவாரியில் பயிரிடப்பட்டுள்ள நிலக் கடலையில் சுருள்பூச்சி தாக்குதல் உள்ளதாக வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்தார்.

இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர் சையத் முகம்மது நகீப் கூறியது:

எலச்சிபாளையம் வட்டாரத்தில் 12,584 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள மானாவாரி நிலக் கடலை பூப்பூக்கும் தருணத்தில் உள்ளது. தற்போது பெய்துள்ள மழையின் காரணமாக நிலக் கடலையில் சுருள் பூச்சியின் தாக்குதல் தென்படுகிறது. இதைத் தவிர்க்க கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றலாம்.

இளம் புழுக்கள் இலையின் நடுப் பகுதியை உண்பதால் பழுப்பு நிற சிறிய கொப்புளங்கள் போன்று உருவாகும். அதிகத் தாக்குதலின் இறுதியில் இலைகள் முழுவதும் சேதப்படுத்தப்படுவதால் வயலில் குறிப்பிட்ட தூரத்திற்கு எரிந்தது

போல காணப்படும். பொருளாதார சேத நிலை ஒரு மீட்டருக்கு ஒரு புழு ஆகும். இதற்கு மேல் காணப்பட்டால் பயிர் பாதுகாப்பு அவசியம். இதைக் கட்டுப்படுத்த ஊடுபயிராகக் கம்பு சாகுபடி செய்யலாம். கண்காணிப்புப் பயிராக வரப்பு ஓரத்தில சோயா பயிரிடலாம். இரவு நேரங்களில் 8 மணி முதல் 11 மணி வரை ஏக்கருக்கு 5 விளக்குப் பொறிகள் வைத்து அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். மேலும், டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் ஒட்டுண்ணிகளை ஏக்கருக்கு 20 ஆயிரம் வீதம் விடுவதால் சுருள் பூச்சியின் தாக்குதல் குறையும்.

சுருள் பூச்சியின் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு மேல் இருந்தால் ஒரு ஏக்கருக்கு பாசலோன் 4 சத தூள் அல்லது கார்பரில் 10 சத தூள் அல்லது பெனிட்ரோத்தியான் 2 சதம் தூள் 10 கிலோ காலையில் தூவலாம்.

அல்லது ஒரு லிட்டர் நீரில் குயினால்பாஸ் 2 மிலி அல்லது டைமெத்தோயேட் 2மிலி அல்லது மானோகுரோட்டபாஸ் 2 மிலி உடன் நுவான் 2 மிலி கலவையைக் கலந்து தெளிக்கலாம். இந்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு வழிமுறையை மேற்கொண்டு சுருள்பூச்சி தாக்குதலை சமாளிக்கலாம் என்றார் அவர்.

**விவசாயிகளுக்கு ரூ.73 லட்சம் பயிர்க் கடன்**

பி.குமாரபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் பயிர்க் கடன், நகையீட்டு பயிர்க் கடன், கூட்டுப் பொறுப்பு குழுக் கடன் மற்றும் மாற்றுத் திறனாளிகள் கடன் உள்பட 135 பயனாளிகளுக்கு ரூ.73.49 லட்சத்துக்கு கடனுதவிகள் வழங்கப்பட்டன.

சங்க அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு தலைவர் வி.தேவராஜன் தலைமை வகித்தார். நாமக்கல் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் டி.கே.சுப்பிரமணியம், பள்ளிப்பாளையம் ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.செந்தில், டிசிஎம்எஸ் தலைவர் பி.என்.கந்தசாமி, குமாரபாளையம் நகர்மன்றத் தலைவர் சிவசக்தி கே.தனசேகரன், ப.குமாரபாளையம் நகரக் கூட்டுறவு வங்கித் தலைவர் ஏகே.நாகராஜன் முன்னிலை வகித்தனர்.

பயனாளிகளுக்கு கடனுதவியை தமிழக தொழில் துறை அமைச்சர் பி.தங்கமணி வழங்கினார். கடந்த 1933-இல் பதிவு செய்யப்பட்ட இந்தச் சங்கத்தின் கீழ் 12

நியாய விலைக் கடைகள் இயங்கி வருவதோடு, மூன்று வருவாய்க் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயன் பெறுகின்றனர். இந்தச் சங்கம் மூலம் 1976 விவசாயிகளுக்கு ரூ.70.80 லட்சம் வறட்சி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

குமாரபாளையம் அமானி கிராமத்தில் 12 ஆயிரம் சதுர அடி நிலம் இந்தச் சங்கத்துக்கு சொந்தமாகப் பெறப்பட்டுள்ளது. இதில், சங்க அலுவலகக் கட்டடம் கட்டவும், விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள், விளைபொருள்களைப் பாதுகாப்பாக வைக்க 2 கிடங்குகள் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பள்ளிப்பாளையம் நகர்மன்றத் தலைவர் பி.எஸ்.வெள்ளிங்கிரி, குப்பாண்டபாளையம் சிற்றூராட்சித் தலைவர் ஜி.சின்னுசாமி, தட்டாங்குட்டை சிற்றூராட்சித் தலைவர் எஸ்.செல்லமுத்து, இயக்குநர்கள் முருகன், பழனியம்மாள், தமிழ்செல்வி, ராஜு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**17.09.2013**

## கரிவலத்தில் இன்று விவசாயிகள் பயிலரங்கம்

தென்காசி : கரிவலம்வந்தநல்லூரில் இன்று (17ம் தேதி) பட்டு விவசாயிகள் பயிலரங்கள் மற்றும் கண்டுணர்வு சுற்றுலா இன்று நடக்கிறது. தமிழ்நாடு அரசு பட்டு வளர்ச்சி துறை சார்பில் கரிவலம்வந்தநல்லூர் பசும்பொன் தேவர் அரங்கத்தில் பட்டு விவசாயிகள் பயிலரங்கள் மற்றும் நாளை (18ம் தேதி) கண்டுணர்வு சுற்றுலா நடக்கிறது. விழாவிற்கு பட்டு வளர்ச்சி துறை மண்டல துணை இயக்குநர் முருகன் தலைமை வகிக்கிறார். கரிவலம்வந்தநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் பால்ராஜ் முன்னிலை வகிக்கிறார். பட்டு உதவி ஆய்வாளர் சங்கரன் வரவேற்று பேசுகிறார். நவீன தொழில் நுட்பங்கள் குறித்து உதவி இயக்குநர் ராஜன், விஞ்ஞானிகள் சக்திவேல், மோகன் ஆகியோர் ஊக்க உரை அளிக்கின்றனர். கரிவலம்வந்தநல்லூர் பாண்டியன் கிராம வங்கி சீனியர் மேலாளர் கணேசன், இலஞ்சி ஆக்ஸிஸ் வங்கி வேளாண்மை அதிகாரி தர்மர், புது வாழ்வு திட்ட அணி தலைவர் முனீஸ்வரன் ஆகியோர் வாழ்த்தி பேசுகின்றனர். ராமலிங்கா இளம்புழு வளர்ப்பு மைய நவநீதன் அனுபவ உரையளிக்கிறார். ராமசுப்பிரமணிய ராஜா நன்றி கூறுகிறார். தொடர்ந்து நாளை(18ம் தேதி) பழனி மற்றும் தொழில் நுட்ப சேவை மைய பகுதிகளில் நவீன தொழில் நுட்பங்களை கையாளும் முன்னோடி விவசாயிகளை சந்தித்தல். நவீன தொழில் நுட்பங்களை கண்டுணர்தல் நிகழ்ச்சியும் நடக்கிறது.

## நெல் அறுவடை செலவு அதிகரிப்பு

தேனி : குண்டல்நாயக்கன்பட்டி, பாலார்பட்டி கிராம விவசாயிகளுக்கு ஆற்றில் நீர் வரத்து உள்ளதால், நெல் அறுவடை செலவுகள் அதிகரித்துள்ளது.

தேனி அருகே உள்ள குண்டல்நாயக்கன்பட்டி, பாலார்பட்டி, உப்புக்கோட்டை

கிராமங்களை சேர்ந்தவர்களுக்கு பெரியாற்றின் மறுகரையில் உள்ள உப்பார்பட்டியில் 200 ஏக்கர் நிலங்களில் வயல்கள் உள்ளன. ஆனால் உப்பார்பட்டியில் நெற்கதிர் அடிப்பதற்கு களம் உட்பட எந்த வசதிகளும் இல்லை. எனவேல இவர்கள் நெற்கதிர்களை அறுத்து கட்டுகளாக கட்டி, பெரியாற்றை கடந்து தங்கள் கிராமத்திற்கு சுமந்து கொண்டு போய் சேர்ப்பார்கள். இதற்காக விவசாயிகள் அதிக பட்சம் ஒரு கி.மீ., தூரம் மட்டும் நடப்பது வழக்கம். தற்போது, ஆற்றில் நீர் வரத்து உள்ளதால் கட்டுகளை தலைச்சுமையாக சுமந்து ஆற்றை கடக்க முடியாது.

எனவே நெல் கட்டுகளை டிராக்டரில் ஏற்றி வீரபாண்டி, போடேந்திரபுரம், உப்புக்கோட்டை வழியாக 15 கி.மீ., தூரம் சுற்றி கொண்டு செல்ல வேண்டியது உள்ளது.

ஒரு முறை டிராக்டரில் கட்டுகளை ஏற்றி வர 30 கி.மீ., பயணிக்க வேண்டும். இதற்கு வாடகை செலவு மட்டும், ஆயிரம் ரூபாயை கடந்து விடுகிறது. ஒரு ஏக்கருக்கு இரண்டு லோடு ஏற்ற வேண்டும். ஏற்று கூலியையும் சேர்த்து விவசாயிகள் ஏக்கருக்கு மூவாயிரம் ரூபாய் செலவு செய்ய வேண்டும். தற்போதைய மழையில் அதிகளவு சேதம் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த கூடுதல் செலவும் விவசாயிகளுக்கு சுமையாக உள்ளது.

எனவே உப்பார்பட்டிக்கும், குண்டல்நாயக்கன்பட்டிக்கும் இடையே பெரியாற்றின் குறுக்கே நடைபாலம் கட்டித்தர வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்

## விதைப்பண்ணை ஆய்வு

ராஜபாளையத்தை சேர்ந்தவர் விவசாயி அமனுல்லா, பாசிபயறு ஆதார விதைபண்ணை அமைத்து இருந்தார். புதுப்பாளையம் கிராமத்தில் விவசாயி முருகேச ராஜா, உளுந்து வம்பன் 4 ரக ஆதார விதைபண்ணை அமைத்து இருந்தார். பண்ணைகளை மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் (மாநில திட்டம்) கனகராஜ், விதை சான்று உதவிஇயக்குனர் ராமமூர்த்தி பார்வையிட்டனர். மேலும் தரமான விதை உற்பத்தி, அதிக மகசூல் பெற ஆலோசனைகளை அளித்தனர். சிறப்பான விதைபண்ணை அமைக்க ஆலோசனை அளித்த

ராஜபாளையம் உதவிவிதை அலுவலர் அம்மையப்பன், சாத்தூர் உதவிவிதை அலுவலர் வேலுச்சாமியை, அதிகாரிகள் பாராட்டினர்.

## பயிர் காப்பீடு செய்ய அழைப்பு

வத்திராயிருப்பு : நடப்பு சம்பா நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள்,தாங்கள் பயிர்களை காப்பீடு செய்ய, வேளாண்மைத் துறையினர் அழைப்பு விடுத்துள்ளனர். நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், அவ்வப்போது நிலவும் வறட்சி நிலை, நோய் தாக்குதல், அதிக மழை வெள்ளம் போன்ற காலங்களில், தாங்கள் மகசூலை இழப்பதுடன், விவசாய செலவுகளையும் ஏக்கருக்கு 15 ஆயிரம் வீதம் இழக்க நேரிடுகிறது. விருதுநகர் மாவட்ட நெல் விவசாயிகள், அடிக்கடி இழப்புகளை சந்திப்பதால், பெரும் பொருளாதாரச் சிக்கலில் தவிக்க நேரிடுகிறது.
பயிர்காப்பீடு குறித்து, விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படாததே, இதற்கு காரணமாகும் என, விவசாயத்துறையினர் தெரிவித்துள்ளனர். கடந்த ஒரு வருடமாக, இழப்புகளுக்கு ஆளான நெல் விவசாயிகளுக்கு, பாதுகாப்பு கொடுக்கும் பொருட்டு, இந்த ஆண்டு நடப்பு சம்பா நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், தாங்கள் பயிர்களை காப்பீடு செய்து கொள்ள, விவசாயத்துறையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.
கிராமங்களில் நோட்டீஸ்கள் வினியோகிக்கப்பட்டு வருகிறது.
வேளாண்மைத்துறை உதவி இயக்குனீர் பாண்டித்துரை கூறுகையில்,""இத் திட்டத்தில், ஒவ்வொரு விவசாயியும் ஏக்கருக்கு ரூ.116 செலுத்தினால் போதும். தாங்களை நஷ்டத்தில் இருந்து காத்துக் கொள்ளலாம்.
ஒவ்வொரு முறையும் பதைபதைப்புடன், விவசாயம் செய்ய தேவையில்லை. அனைத்து பகுதிகளிலும் ,விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது,"என்றார்.

## விவசாயிகளுக்கு மானியத்தில் "சாப் கட்டர்' "ஊறுகாய் புல்' தயாரித்தல் திட்டத்தில் உதவி

ஈரோடு: தமிழகத்தில், கடந்த இரு ஆண்டாக மழையின்றி, கால்நடை தீவன பற்றாக்குறை ஏற்பட்டது. கால்நடைகளின் தீவன பற்றாக்குறையை போக்க, கால்நடை துறை சார்பில் மானிய விலையில் தீவன சோளம் வழங்கப்பட்டது. விவசாயிகள் பாத்திகள் அமைத்து, விதைகள் தெளித்து, உரம் மற்றும் களை எடுத்து, அறுவடை செய்ய, ஏக்கருக்கு, 13 ஆயிரத்து, 600 ரூபாய் செல்வாகும். இதில், 50 சதவீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இம்மானியத்தில், விவசாயிகள் உற்பத்தி செய்யும் இத்தீவனத்தை, தங்கள் உபயோகத்துக்கு போக, மீதமுள்ள உபரி பயிரை, அருகில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் மூலம், தீவன பற்றாக்குறை உள்ள கறவை மாடுகள் வளர்க்கும் உறுப்பினர்களுக்கு, 50 சதவீத மானிய விலையில் விற்க அறிவுறுத்தப்பட்டது.

இதற்கான தீவன சோளம், தமிழக அரசு கால்நடை துறை சார்பில், பல்வேறு மாநிலங்களில் இருந்து மொத்தமாக கொள்முதல் செய்யப்பட்டு, தகுதியுள்ள விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு, 16 கிலோ வீதம் வழங்கப்பட்டுள்ளது. சாகுபடி செய்த சோளத்தட்டை முறையாக, சேதாரமின்றி, கால்நடைகளுக்கு பயன்படுத்தும் வகையில், புல்வெட்டும் கருவி (சாஃப் கட்டர்) மானிய விலையில் வழங்கப்படவுள்ளது.

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் மற்றும் தீவன அபிவிருத்தி திட்டத்தில், ஊறுகாய் புல் பொருட்கள் தயாரித்தல் என்ற திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், நான்கில் ஒரு பங்கு மானியத்தில், விவசாயிகளுக்கு இந்த இயந்திரம் வழங்கப்பட உள்ளது.

ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை சார்பில், கோவை யுனிவர்சல் டைரி எக்யூப்மென்ட் நிறுவனம் புல்வெட்டும் கருவியை மொத்தமாக கொள்முதல் செய்துள்ளது. மூன்று பிளேடுகளை கொண்ட இந்த மெஷின், 16 ஆயிரம் ரூபாயாகும். 100 கிலோ எடை கொண்ட இந்த மெஷின், ஒரு முனை மின்சாரத்தில்

இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் வணங்காமுடி கூறியதாவது:
ஊறுகாய் புல் பொருட்கள் தயாரித்தல் திட்டத்தின் கீழ், ஈரோடு மாவட்டத்தில், 15 பயனாளிகளுக்கு, புல் வெட்டும் கருவி மானிய விலையில் வழங்கப்பட உள்ளது. அந்த பயனாளிகளுக்கு, ஊறுகாய் புல் பொருட்கள் தயாரிக்க தொட்டிக்கு, பத்தாயிரம் ரூபாய், முழு மானியமாக அரசே வழங்குகிறது. மெஷினுக்கு வழங்கப்படும் மானியம், 25 சதவீதமாகும். மெஷின் விலை, 16 ஆயிரம் ரூபாய்க்கு, விவசாயிகள், 4,000 ரூபாய் செலுத்தினால் போதும், என்றார்

## இடைவெளிவிட்டு நடவு முறை: விளைச்சல் தரும் கல்யாண பூசணி

காஞ்சிபுரம்:கல்யாண பூசணியை இடைவெளி விட்டு நடவு செய்தால், நல்ல விளைச்சலை கொடுக்கிறது என்கின்றனர், மாமண்டூர்
விவசாயிகள்.
காஞ்சிபுரம் அடுத்துள்ளது, துாசி மாமண்டூர். இங்கு, மேட்டுப்பகுதிகளில் உள்ள விளை நிலங்களில், விவசாயிகள் வெள்ளரி, அகத்தி கீரை, தர்பூசணி, கல்யாண பூசணி, அவரை, கத்திரி ஆகியவற்றை, சாகுபடி
செய்கின்றனர்.
கல்யாண பூசணியை, 10 அடி அகலம், 8 அடி நீளத்திற்கு இடைவெளிவிட்டு நடவு செய்தால், நல்ல விளைச்சலை கொடுப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.
துாசிமாமண்டூர் விவசாயிகள் கூறியதாவது:
கல்யாண பூசணிக்காய்,

ஒவ்வொரு அமாவாசையின் போது, அதிகளவில் விற்பனையாகிறது. திருஷ்டி கழிக்க, பொதுமக்கள், வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர்.
வெண்பாக்கம், வேளாண்மை துறை அதிகாரிகளின் ஆலோசனைபடி, இடைவெ-ளிவிட்டு நடவு செய்யும் முறையை, கடைபிடித்து வருகிறோம்.
இதில், ஒவ்வொரு செடியும் நன்கு படர்ந்து செல்கின்றன. 45வது நாளில் பூக்க

துவங்குகிறது.

அனைத்து பூக்களிலும் காய்கள் பிடிக்கிறது. 85 வது நாளில், காய் அறுவடைக்கு தயாராகிறது.

குறைந்த செலவில், நிறைய லாபம் கிடைக்கிறது. ஒரு கல்யாணி பூசணி, மூன்று முதல் ஐந்து கிலோ எடை வரை உள்ளது.

இவ்வாறு, விவசாயிகள் கூறினர்.

## நெல் மூட்டைகளை கொண்டு வர முடியாமல் விவசாயிகள் அவதி

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் வாணியம்பாளையம், ஓட்டேரிப்பாளையம், சுந்தரிப்பாளையம் உட்பட பல கிராமங்களில் விளைந்து, அறுவடைக்கு தயாராக இருக்கும் நெற் பயிர்கள் கீழே சாய்ந்து, மழை நீரில் நனைந்து வீணாகிறது. இருப்பினும் அறுவடை இயந்திரங்கள் மூலம் விவசாயிகள் நெல் அறுவடை செய்து வருகின்றனர். பல இடங்களில் அறுவடை செய்து, வயலில் குவியலாக வைத் துள்ள நெல்லை வீடுகளுக்குகொண்டு வர முடியாமல் விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர்.

மாட்டு வண்டிகள் மற்றும் டிராக்டர்கள் நேரடியாக வயலுக்குச் சென்று நெல் மூட்டைகளை வெளியில் ஏற்றி வர முடியாமல், ஆட்கள் மூலம் தலையில் கொண்டு வந்து கிராமச் சாலைகளில் வைக்கின்றனர்.அங்கிருந்து டிராக்டர்களில் ஏற்றி வந்து, சாலையில் வைத்து, லாரிகளில் ஏற்றி மார்க்கெட் கமிட்டிகளுக்கு அனுப்புகின்றனர். பல இடங்களில் அறுவடை செய்த நெல் குவியலாக வயலில் அப்படியே வைத்துள்ளனர். இதனால் விவசாயிகள் கைக்கு எட்டியது, வாய்க்கு எட்டாத குறையாக வேதனை அடைந்துள்ளனர்.

## கோமாரி நோய் தாக்கி கறவை மாடுகள் பலி : இறைச்சி கழிவால் நோய் பரவும் அபாயம்

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டியில், கோமாரி நோய் தாக்கி இறந்த மாடுகளின் இறைச்சி, சாலையோர கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. மாடுகளின் கழிவுகளை, பொது குடிநீர் டேங்க் அருகே கொட்டுவதால், தொற்று

நோய் பரவும் அபாயம் உள்ளது என, பேரூராட்சி நிர்வாகம் புகார் தெரிவித்துள்ளது.

பனமரத்துப்பட்டி பகுதி விவசாயிகள், கறவை மாடு, ஆடு, எருமை உள்ளிட்ட கால்நடை வளர்ப்பதை, உப தொழிலாக செய்து வருகின்றனர். கறவை மாடு, ஆடு, கன்றுகுட்டியை, தற்போது, கோமாரி நோய் தீவிரமாக தாக்கி வருகிறது.

பனமரத்துப்பட்டி ஆத்துமேடு பகுதியை சேர்ந்த விவசாயி சக்திவேலுக்கு சொந்தமான இரண்டு மாடுகள், மணிகண்டனின் ஒரு மாடு, சேகர் என்பவரின் இரண்டு மாடுகள் என பத்துக்கும் மேற்பட்ட மாடுகள், கோமாரி நோய்க்கு பலியாகின.

நல்லியாம்புதூர் சரவணன், உலகரை மேடு ராஜா, ஆத்துமேடு மணி உள்ளிட்ட பல விவசாயிகளின் மாடுகளை, கோமாரி நோய் தாக்கியது. நோய் தாக்கிய மாடுகள், செத்து மடிவதால், விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

விவசாயிகள், கோமாரி நோய் தாக்கி இறந்த மாடுகளை, குறைந்த விலைக்கும், இலவசமாகவும், இறைச்சி கடையினருக்கு தருகின்றனர். இறந்த மாடுகளின் தோலை கழற்றி எடுத்துக் கொண்டு, இறைச்சியை, சேலம், சீலநாயகன்பட்டி, மல்லூர் உள்ளிட்ட இடங்களில், சாலையோரத்தில் உள்ள மானா வறுவல் கடைக்கு விற்பனை செய்கின்றனர்.

நோய் தாக்கி, புண்கள் ஏற்பட்ட தலை, கால்கள், குடல் உள்ளிட்ட கழிவுகளை, ஏரி, ஓடை, மழை நீர் குட்டை ஆகிய இடங்களில், இறைச்சிக் கடையினர் கொட்டுகின்றனர்.

பனமரத்துப்பட்டி அய்யனாரப்பன் கோவில் அருகே, மூன்று குடிநீர் டேங்குகள் உள்ளன. அதனருகே உள்ள குட்டையில், கோமாரி நோய் தாக்கி இறந்த மாடுகளின் இறைச்சி கழிவுகள் கொட்டப்படுகிறது. நாய், காக்கைகள், இறைச்சிக் கழிவுகளை, குடிநீர் டேங்க் அருகே இழுத்து வந்து போட்டு சாப்பிடுகின்றன. அதனால், குடிநீர் மூலம் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது என, பனமரத்துப்பட்டி பேரூராட்சி நிர்வாகம், உணவு பாதுகாப்புத்துறை

அதிகாரிகளிடம் புகார் செய்தனர்.

நேற்று மாலை, உணவு பாதுகாப்பு அலுவலர் ஆறுசாமி, டவுன் பஞ்சாயத்து சுகாதார மேற்பார்வையாளர் சீனிவாசன், இறைச்சி கழிவு கொட்டப்பட்ட இடத்தை பார்வையிட்டனர்.

அப்போது அவர் கூறியதாவது:

சேலம் மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் டாக்டர் அனுராதா உத்தரவுபடி, இறைச்சி வெட்டப்படும் இடம், கழிவுகள் கொட்டிய இடம் ஆகியவற்றை பார்வையிட்டோம். சுகாதாரமான முறையில், இறைச்சி வெட்டி விற்பனை செய்ய வேண்டும் உள்ளிட்ட விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என, இறைச்சிக் கடையினருக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

## பாமாயில், சூரியகாந்தி எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு ரூ.100 சரிவு

சேலம்: வரத்து அதிகரிப்பால் பாமாயில், சூரியகாந்தி எண்ணெய் விலை, 15 கிலோ டின்னுக்கு, 100 ரூபாய் குறைந்துள்ளது.

கடந்த ஆகஸ்ட், 15ம் தேதி வரை அரிசி விலை கிடுகிடுவென உயர்ந்து இருந்தது. பின், ஓரளவு அரிசி விலை குறைந்துள்ளது. பெரும்பாலானோர் வீடுகளில் பயன்படுத்தப்படும் பாமாயில், சூரியகாந்தி (சன் ஃபிளவர்) எண்ணெய் விலை டின்னுக்கு (மொத்த விலையில்), 20 நாட்களுக்கு முன், 100 ரூபாய் உயர்ந்தது. இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியால், எண்ணெய் விலை உயர்ந்ததாக வியாபாரிகள் கூறினர்.

தமிழகத்தில் கடலை எண்ணெய்க்கு பதிலாக பாமாயில் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் பயன்படுத்துவோர் அதிகம் உள்ளனர். பண்டிகை காலம் துவங்கி விட்டதால், எண்ணெய் வகைகளின் விலை ஏறுமுகமாகவே இருக்கும். தற்போது, மலேசியாவில் இருந்து, அதிகளவு எண்ணெய் வரத்து இருப்பதால், 15 கிலோ டின்னுக்கு, 100 ரூபாய் விலை குறைந்துள்ளது.

மொத்த விலையில், 15 கிலோ எடை கொண்ட பாமாயில் டின், 20 நாட்களுக்கு

முன், 1,050 ரூபாயாக இருந்தது. டின்னுக்கு, 100 ரூபாய் குறைந்து, 950 ரூபாயாக உள்ளது. அதேபோல், சூரியகாந்தி எண்ணெய், 15 கிலோ எடை கொண்ட டின், 20 நாட்களுக்கு முன், 1,450 ரூபாயாக இருந்தது. இன்று டின்னுக்கு, 100 ரூபாய் குறைந்து, 1,350 ரூபாயாக உள்ளது.

சேலம் மாநகர தாவர எண்ணெய் வணிகர்கள் சங்கத் தலைவர் சந்திரதாசன் கூறியதாவது:

பாமாயில் எண்ணெய், மூன்று தரங்களில் விற்பனை செய்யப்படுகிறது. கடலை எண்ணையை மறந்து வரும் மக்கள், சூரியகாந்தி எண்ணெய், பாமாயில் எண்ணெயை அதிகளவு பயன்படுத்தி வருகின்றனர். மலேசியாவில் இருந்து, அதிகளவு பாமாயில் எண்ணெய் வரத்தாகிறது. ரஷ்யா, உக்ரைனில் இருந்து சூரியகாந்தி எண்ணெய் வரத்தாகிறது. இதனால் விலை குறைய துவங்கி உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## பொது பணவீக்கம் 6.1 சதவீதமாக உயர்வு

புதுடில்லி: நடப்பாண்டு ஆகஸ்ட் மாதத்தில், நாட்டின் பொதுப் பணவீக்கம், 6.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, இதற்கு முந்தைய ஜூலை மாதத்தில், 5.79 சதவீதமாக குறைந்து காணப்பட்டது என, மத்திய அர” வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.வெங்காயம்:மதிப்பீட்டு மாதத்தில், வெங்காயத்தின் விலை, ஆண்டுக் கணக்கில், 245 சதவீதம் அதிகரித்துள்ளது. மேலும், காய்கறிகளின் விலையும், 77.81 சதவீதம் உயர்ந்துள்ளது.

இது தவிர, அரிசி, தானியங்கள், முட்டை, மீன், இறைச்சி ஆகியவற்றின் விலையும் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்து உள்ளது.இருப்பினும், கணக்கீட்டு மாதத்தில், உருளைக்கிழங்கின் விலை, ஆண்டுக் கணக்கில், 15 சதவீதமும், பருப்பு வகைகளின் விலை, 14 சதவீதமும் சரிவடைந்துள்ளது. மேலும், சர்க்கரை மற்றும் சமையல் எண்ணெய்விலை முறையே, 4.2 சதவீதம் மற்றும் 3.86 சதவீதம் குறைந்துள்ளது.ஒட்டு மொத்த அளவில், தயாரிப்பு பொருட்களின் விலை, 1.9

சதவீதம் அளவிற்கு உயர்ந்துள்ளது.பணவீக்க உயர்வு குறித்து, பிரதமரின் பொருளாதார ஆலோசனை குழுவின் தலைவர் சி.ரங்கராஜன் கூறியதாவது:டாலருக்கு எதிரான ரூபாய்வெளி மதிப்பு சரிவின் காரணமாக, ஆகஸ்ட் மாதத்தில், பணவீக்கம் அதிகரித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில், பருவ மழை நன்கு உள்ளதால், வரும் மாதங்களில், உணவுப் பொருட்களுக்கான பணவீக்கம் குறையத் துவங்கும். இது, மேலும் பல சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.ரிசர்வ் வங்கி:நடப்பு நிதியாண்டின் இறுதியில், பணவீக்கம், 5.5 சதவீதம் என்ற அளவில் இருக்கும் என, எதிர்பார்க்கப் படுகிறது.இவ்வாறு ரங்கராஜன் கூறினார்.பணவீக்கம் அதிகரித்துள்ளதையடுத்து, ரிசர்வ் வங்கி, செப்டம்பர் 20ம் தேதி வெளியிட உள்ள, அதன் நிதி ஆய்வு கொள்கையில், முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை குறைப்பது கடினம் என, இத்துறையைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**17.09.2013**

## ஈரோடு மாவட்டத்தில் ஆன்லைன் வர்த்தகத்தால் மஞ்சள் சாகுபடி குறைகிறது



ஈரோடு: மஞ்சள் விலை வீழ்ச்சி காரணமாக கடந்த ஆண்டைவிட ஈரோடு மாவட்டத்தில் 5 ஆயிரம் ஏக்கரில் மஞ்சள் சாகுபடி பரப்பு குறையும் என தெரிகிறது. இந்திய அளவில் மஞ்சள் சாகுபடியில் ஆந்திர மாநிலம் முதலிடத்தையும், தமிழகம் இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளது. ஆந்திராவில் நிஜமதாபாத், தமிழகத்தில் ஈரோடு, மகாராஷ்டிராவில் சாங்கிலி ஆகிய பகுதிகளில் இயங்கி வரும் மஞ்சள் மார்க்கெட் உலக அளவில் பிரபலமானவை. குறிப்பிட்ட இந்த மஞ்சள் மார்க்கெட்டுகளில் நடைபெறும் ஏலத்தில் பங்கேற்று மஞ்சளுக்கான விலையை வியாபாரிகள் நிர்ணயித்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர். கடந்த 2009ம் ஆண்டு ஒரு குவின்டால் விரலி மஞ்சள் அதிகபட்சமாக ரூ17,500க்கு விலை போனது. அந்த சமயத்தில் ஒரு பவுன் தங்கம் விலை ரூ17,500க்கு தான் விற்றது. தங்கத்திற்கு நிகராக உயர்ந்த மஞ்சளின் மதிப்பு பின்னர் படிப்படியாக குறைய துவங்கி விட்டது. விலை அதிகமாக கிடைத்ததால் 2010ம் ஆண்டில் மஞ்சள் சாகுபடி பரப்பு அதிகரித்தது. 2009ம் ஆண்டு ஈரோடு மாவட்டத்தில் மொத்தமே 6 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே மஞ்சள் சாகுபடி ஆனது. ஆனால் 2009ல் மஞ்சள் விலை அதிகரிப்பு

காரணமாக ஈரோடு மாவட்டத்தில் 2010ம் ஆண்டில் 12 ஆயிரம் ஏக்கரில் மஞ்சள் சாகுபடி அதிகரித்தது. 2010ம் ஆண்டு மஞ்சள் விலை குவின்டால் ஸி10 ஆயிரமாக குறைந்தது. இருப்பினும், 2011ம் ஆண்டில் சாகுபடி பரப்பு முந்தைய ஆண்டை காட்டிலும் ஒன்றரை மடங்கு அதிகரித்து 31,500 ஏக்கராக அதிகரித்தது. 2012ல் மஞ்சள் விலை சீசன் துவக்கத்தில் குவின்டால் ரூ4 ஆயிரமாக விலை வீழ்ச்சியடைந்தது. தொடர்ந்து விலை வீழ்ச்சியடைந்த போதிலும் கடந்த ஆண்டு கூட ஈரோடு மாவட்டத்தில் 17,500 ஏக்கரில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டது. ஒரு குவின்டால் மஞ்சளுக்கு ரூ10 ஆயிரம் வீதம் கிடைத்தால் கூட ஓரளவு லாபம் பார்த்து விடலாம் என்று விவசாயிகள் கருதுவதால் தொடர்ந்து மஞ்சள் சாகுபடியில் ஆர்வம் காட்டி வந்தனர்.

ஆனால், கடந்த 2 ஆண்டுகளாக மஞ்சள் விலை கடும் வீழ்ச்சியடைந்து வருவதால் பல விவசாயிகள் சாகுபடி பரப்பை குறைத்து கொண்டனர். ஈரோடு மாவட்டத்தில் இந்த ஆண்டு ஆகஸ்ட் வரை 9,500 ஏக்கரில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது குறித்து தோட்டக்கலைத்துறையினர் கூறியதாவது: கிணறு, போர்வெல் பாசனம் மூலமாக மஞ்சள் சாகுபடி நடந்ததால் கடந்த ஆண்டு 17,500 ஏக்கரில் மஞ்சள் சாகுபடி நடந்தது. ஆகஸ்ட் இறுதி வரை 9500 ஏக்கரில் மஞ்சள் சாகுபடி ஆகியுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏறத்தாழ 5 ஆயிரம் ஏக்கர் மஞ்சள் சாகுபடி பரப்பு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு தோட்டக்கலைத்துறையினர் தெரிவித்தனர். விவசாயிகள் தரப்பில் கூறியதாவது: கடந்த 2012ம் ஆண்டு ஜுன் மாதத்தில் மஞ்சள் விலை குவின்டால் ரூ4 ஆயிரத்துக்கு கீழே குறைந்தது. அரசு நேரடியாக மஞ்சளை கொள்முதல் செய்வதாக அறிவித்ததும் வெளி மார்க் கட்டில் ரூ7500 வரையிலும் விலை எகிறியது. கடந்த ஆண்டு ஆகஸ்ட்டில் மீண்டும் குறைந்து ரூ6500 ஆக விலை வீழ்ச்சியடைந்தது. அதன் பிறகு இதுவரையி லும் ஒரு குவின்டால் விலை ரூ5500 முதல் அதிகபட்சமாகவே ரூ6500க்கு தான் விலை போகிறது. மஞ்சள் விலை தொடர்

வீழ்ச்சிக்கு ஆன்லைன் வர்த்தகமே காரணமாக உள்ளது. ஆன்லைன் வர்த்தகத்தில் இருந்து மஞ்சளை நீக்கினால் மட்டுமே மஞ்சளுக்கு கட்டுபடியான விலை கிடைக்கும். இது குறித்து பிரதமர், வணிகத்துறை மற்றும் வேளாண் துறை அமைச்சர் வரையிலும் விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இப்பிரச்னையில் மத்திய அரசு உரிய கவனம் செலுத்தினால் மட்டுமே மஞ்சள் விவசாயிகளை காப்பாற்ற முடியும். இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

### சின்ன வெங்காயம் விலை ‘விர்ர்’  முதல் ரகம் கிலோ 50 ரூபாய்



தர்மபுரி: தர்மபுரி மாவட்ட சந்தைகளில் சின்ன வெங்காயம் கிலோ ரூ40 முதல் ரூ50 வரை விற்பனை செய்யப்படுகிறது. தமிழகத்தில் திண்டுக்கல், திருச்சி, பெரம்பலூர், ஈரோடு, நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களில் சின்ன வெங்காயம் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் 400 ஏக்கருக்கு மேல் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் சின்னவெங்காயம் பதப்படுத்தி உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. சென்னை, சேலம், கோவை, கிருஷ்ணகிரி மாவட்ட வியாபாரிகள் நேரில் வந்து மொத்தமாக வாங்கி செல்கின்றனர். கடந்த ஒரு மாதமாக சின்ன வெங்காயத்தின் விலை உச்சத்தில் இருந்தது. படிப்படியாக விலை சரிந்து, கடந்த 1ம் தேதி ரூ34 முதல் ரூ39 வரை விற்பனை செய்யப்பட்டது.

மாவட்டம் முழுவதும் ஒரு வாரமாக மழை பெய்து வருவதால், சின்ன வெங்காயம் அறுவடை பணி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சந்தைக்கு சின்ன வெங்காயம் வரத்து குறைந்தது. கடந்த மூன்று நாட்களாக மீண்டும் விலை உச்சத்திற்கு சென்றது. நேற்று ஒரு கிலோ ரூ40 முதல் ரூ50 வரை விற்பனை செய்யப்பட்டது. இனியும் விலை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

## கிலோ மல்லிகை 600க்கு விற்பனை



சேலம்: சுபமுகூர்த்தம் மற்றும் ஓணம் பண்டிகையை முன்னிட்டு பூக்களின் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ மல்லிகைப்பூ கிலோ 600க்கு விற்பனை செய்யப்பட்டது. சுபமுகூர்த்தம், ஓணம் பண்டிகையை முன்னிட்டு சேலம் மார்க்கெட்டில் பூக்கள் விலை அதிரடியாக உயர்ந்தது. நாளை 16ம் தேதி சுபமுகூர்த்த தினம். அன்று நாடு முழுவதும் மலையாள மக்கள் ஓணம் பண்டிகையை கொண்டாடுகின்றனர். நேற்று சேலம் வ.உ.சி. பூமார்க்கெட்டில் பூக்கள் வாங்க மக்கள் கூட்டம் அதிகம் காணப்பட்டது. மல்லிகை, முல்லை, பட்டன் ரோஜா, ஜாதிமல்லி, கோழிக்கொண்டை, செவ்வந்திப் பூக்களை மக்கள் வாங்கிச் சென்றனர். நேற்றைய நிலவரப்படி ஒரு கிலோ மல்லிகைப்பூ 600, முல்லை 600, கனகாம்பரம் 800, பட்டன் ரோஜா 200, செவ்வந்தி 140க்கும் விற்பனை செய்யப்பட்டது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**17.09.2013**

**சொட்டுநீர் பாசன திட்டத்தை மேம்படுத்த வேண்டும் அரசு செயலாளர் வேண்டுகோள்**



அரியலூர்,

அரியலூர் மாவட்டத்தில் சொட்டுநீர் பாசன திட்டத்தை மேம்படுத்த வேண்டுமென்று அரசு செயலாளர் கூறினார்.

<u>ஆலோசனை கூட்டம்</u>

அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் தமிழக அரசின் கண்காணிப்பு அலுவலர் அரசு செயலாளர் சந்தீப் சக்சேனா மாவட்ட வளர்ச்சிப்பணிகள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு பேசிய தாவது:-

<u>அனைத்து உதவிகள்</u>

தமிழக முதலமைச்சர் அரி யலூர் மாவட்டத்தை டெல்டா மாவட்டம் என அறிவித்து டெல்டா மாவட் டத்திற்குண்டான அனைத்து உதவிகளையும் விவசாய பெரு மக்களுக்கு வழங்கி யுள்ளார்.

சொட்டு நீர் பாசன முறை யினை அரியலூர் மாவட்டத் தில் அதிகப்படுத்தி சிக்கன நீர் பாசனத்தை விவசாயிகளுக்கு அளித்திட வேண்டும். மண் மாதிரி பல்வேறு இடங்களில் எடுக்கப் பட்டு மண் பரி சோதனை விஞ்ஞான முறை யில் தெரிவிப்பதற்காக கணினி மூலம் தமிழக முதலமைச்சர் ஆணைப்படி விரைவில் வழங்க ஏற்பாடு செய்யப்படும். அதைக் கொண்டு விவசாயி களுக்கு சிக்கன முறையில் விவ சாயம் செய்வதற்கும் தேவை யான உரங்களை இடுவதற்கு ஆலோசனை வழங்கி பயிர் திறனை வளர்ப்பதற்கும் ஏது வாக வேளாண்மை துறை யினர் நன்கு பணிபுரிந்திட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

நலத்திட்ட உதவிகள்

மேலும், வளர்ச்சித்துறை, வருவாய்துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பால்வளத்துறை, ஆதி திரா விடர் மற்றும் பழங் குடியினர் நலத்துறை, பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறு பான்மையினர் நலத்துறை, தமிழக முதலமைச்சரின் சிறப்பு திட்ட செயலாக்கம் மற்றும் பல்வேறு துறைகளை யும் தமிழக அரசின் கண் காணிப்பு அலுவலர் மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சந்தீப் சக்சேனா ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட சமூக நலத் துறையின் சார்பில் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் 9 பயனாளிகளுக்கு தாலிக்கு 4 கிராம் தங்கமும், திருமண நிதியுதவியாக தலா ரூ.50 ஆயிரம் வீதம் ரூ.4 லட்ச த்து 50 ஆயிரத்திற்கான காசோலை யினையும், வேளாண்மைத் துறையின் சார்பில் 10 விவசா யிகளுக்கு மண் பரிசோதனை செய்தற்கான சான்றிதழ் அட்டையினையும் அவர் வழங்கினார்.

இவ்வாய்வு கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் சரவண வேல்ராஜ் மாவட்ட வருவாய் அலுவலர் கருப்பசாமி, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சடையப்ப விநாயக மூர்த்தி, வருவாய் கோட்டாட் சியர் கணபதி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவி யாளர்கள் முஸ்தபா கமால் பாட்சா (பொது), கல்யாணி (வளர்ச்சி), இணை இயக்குநர் (வேளாண்மை) குண சேகரன், துணை இயக்குநர் (தோட்டக் கலை) சுப் பையா மற்றும் அரசுத்துறை உயர் அலுவலர் கள் பலர் கலந்து கொண்ட னர்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி பயிரிட்டால் நல்ல விலை கிடைக்கும் வேளாண்அதிகாரி தகவல்**



பெரம்பலூர்,

பெரம்பலூர் மாவட்டத் தில் தற்போது பருத்தி பயிரிட்டால் விவசாயி களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்று வேளாண் அதிகாரி தெரி வித்துள்ளார்.

முக்கிய பணப்பயிர்

இதுகுறித்து பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை வளர்ச்சித்துறை வேளாண்மை துணை இயக்குனர் அலுவலக வேளாண்மை அலுவலர் எம்.ரமேஷ் விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்ப தாவது.

தமிழ்நாட்டில் பயிர் செய்யப்படும் முக்கிய பணப் பயிர்களில் ஒன்றான பருத்தி, பெரம்பலூர், விழுப்புரம், சேலம், விருதுநகர், மதுரை ஆகிய மாவட்டங்களில் பயிரி டப்படுகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் ஆண்டு தோறும் சுமார் 20ஆயிரம் எக்டேர் பரப்பில் பெருமளவில் (70 சதவீதம்) மானாவாரி பயிராகவும், மீதம் இறவையிலும் சாகுபடி செய்யப் படுகிறது.

தகவல் மையம்

நடப்பு ஆண்டில் ஆகஸ்டு மாதம் வரை 10ஆயிரத்து 900 எக்டேரில் பருத்தி பயிரிடப் பட்டுள்ளது. ஆகஸ்டு- செப் டம்பர் மாதத்தில் விதைப்பு செய்யப்படும் பருத்தி டிசம்பர்-ஜனவரி மாதங்களில் அறுவடைக்கு வருகிறது.

அப்போது அதன் விலை நிலவரம் எவ்வாறு இருக்கும் என்பதை கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் செயல் பட்டுவரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் வெளி யிட்டுள்ளது.

நல்ல விலை

கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நிலவிய விலைகளை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் நடப்பு ஆண்டு நீண்ட இழை பருத்தி ரகம் அறுவடை யின்போது ஜனவரி மற்றும் பிப்ரவரி 2014-ல் குவிண்டாலுக்கு ரூ.4 ஆயிரத்து 800 முதல் ரூ.5 ஆயிரத்து 100 வரை கிடைக்கும் என்று கணித்துள்ளது.

மேலும் வெளிநாடுகளான சீனா மற்றும் அமெரிக்காவில் கணிக்கப்பட்டுள்ள குறைந்த உற்பத்தியின் காரணமாக குவிண்டாலுக்கு ரூ.4ஆயிரத்து 800 முதல் ரூ.5ஆயிரத்து 100 வரை விலை கிடைக்கும் என்று தெரியவந்துள்ளது.

எனவே விவசாயிகள் ஆவணி- புரட்டாசி பட்டத் தில் நீண்ட இழை பருத்தி ரகங்களை பயிரிட்டு நல்ல விலை பெறுமாறுகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

**உணவுப் பொருள்கள் விலை உயர்வால், ஆகஸ்டு மாதத்தில் மொத்த விலை பணவீக்கம் 6.1 சதவீதமாக உயர்ந்தது முக்கிய கடன் வட்டியை குறைப்பதில் சிக்கல்**



உணவுப் பொருள்கள் விலை உயர்வால், ஆகஸ்டு மாதத்தில் மொத்த விலை பணவீக்கம் 6.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. தொடர்ந்து மூன்று மாதங்களாக இந்த பணவீக்கம் அதிகரித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஜூலை மாதத்தில் இது 5.79 சதவீதமாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது பணவீக்கம் 0.31 சதவீதம் உயர்ந்துள்ளது. எனவே, பாரத ரிசர்வ் வங்கிக்கு முக்கிய கடனிற்கான வட்டியை குறைப்பது ஒரு சவாலாக இருக்கும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

<u>ரகுராம் ராஜன்</u>

பாரத ரிசர்வ் வங்கியின் கவர்னராக பொறுப்பேற்றுள்ள ராகுராம் ராஜன் இம்மாதம் 20–ந் தேதி அன்று முதல் முறையாக பணக் கொள்கை ஆய்வு

அறிக்கையை வெளியிடுகிறார். அப்போது அவர் அதிகரித்து வரும் பணவீக்கத்தையும் கவனத்தில் எடுத்துக்கொள்வார் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அன்னியச் செலாவணி வெளியேற்றத்திற்கும் வரவுக்கும் இடையில் உள்ள வித்தியாசமான நடப்பு கணக்கு பற்றாக்குறை அதிகரித்துள்ளதால், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் வெளிமதிப்பில் கடும் சரிவு ஏற்பட்டது. இவ்வாண்டு ஆகஸ்டு 28–ந் தேதி ரூபாய் வெளிமதிப்பு வரலாறு காணாத அளவிற்கு 68.65–ஆக வீழ்ச்சி அடைந்தது.

இந்நிலையில், ரூபாய் மதிப்பு சரிவை கட்டுப்படுத்தும் வகையில் ரகுராம் ராஜன் மேற்கொண்ட நடவடிக்கைகளால் சென்ற வாரம் ரூபாய் மதிப்பு 2.7 சதவீதம் அதிகரித்தது.

பொருளாதார ஆலோசனைக்குழு

எனினும் ரூபாய் மதிப்பில் ஏற்கனவே ஏற்பட்ட கடும் சரிவால் கச்சா எண்ணெய், பருப்பு, சமையல் எண்ணெய், உரம் போன்றவற்றின் இறக்குமதி செலவினம் அதிகரித்தது. பணவீக்கம் உயர்ந்துள்ளதற்கு இதுவே முக்கிய காரணமாகும் என பிரதம மந்திரியின் பொருளாதார ஆலோசனைக்குழு தலைவர் சி.ரங்கராஜன் தெரிவித்துள்ளார்.

வெங்காயம் விலை

மழையால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால் வெங்காயம் விலை அசுர வேகத்தில் உயர்ந்துள்ளது. ஆகஸ்டு மாதத்தில் இது சென்ற ஆண்டின் இதே மாதத்துடன் ஒப்பிடும்போது 245 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேசமயம், உருளைக்கிழங்கு மற்றும் பருப்பு விலை முறையே 15 சதவீதம் மற்றும் 14 சதவீதம் குறைந்துள்ளது. ஒட்டுமொத்தத்தில் ஆகஸ்டு மாதத்தில் காய்கறி விலை 77.81 சதவீதம் உயர்ந்துள்ளது.

மேலும் அரிசி, தானியங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய உணவு பொருள்கள் விலையும் அதிகரித்துள்ளது. இதுபோன்ற காரணங்களால் ஆகஸ்டு மாதத்தில் உணவு பொருள் பணவீக்கம் மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 18.18

சதவீதமாக உயர்ந்தது. இது, ஜுலை மாதத்தில் 11.91 சதவீதமாக இருந்தது. மொத்த விலை பணவீக்கத்தை கணக்கிடுவதில் இதன் பங்கு 14.34 சதவீதமாக உள்ளது.

அதேசமயம் பருவமழை நன்றாக உள்ளது. நடப்பு நிதி ஆண்டில் வேளாண் உற்பத்தி வளர்ச்சி இரண்டு மடங்கு அதிகரித்து 1.9 சதவீதத்திலிருந்து 4.8 சதவீதமாக உயரும் என பிரதமரின் பொருளாதார ஆலோசனைக்குழு அண்மையில் முன்னறிவிப்பு செய்துள்ளது.

<u>சமையல் எண்ணெய்</u>

இதன் காரணமாக வரும் மாதங்களில் உணவு பொருள் பணவீக்கம் குறையும் என்றும், நடப்பு நிதி ஆண்டின் இறுதியில் மொத்த விலை பணவீக்கம் 5.5 சதவீதமாக குறையும் என்றும் சி.ரங்கராஜன் மேலும் கூறியுள்ளார்.

ஆகஸ்டு மாதத்தில் சர்க்கரை மற்றும் சமையல் எண்ணெய் விலை முறையே 4.2 சதவீதம் மற்றும் 3.86 சதவீதம் குறைந்துள்ளது. இதனையடுத்து, மொத்த விலை பணவீக்கத்தை கணக்கிடுவதில் 65 சதவீத பங்களிப்பை கொண்டுள்ள உற்பத்தி பொருள் பணவீக்கம் 1.9 சதவீதம் மட்டுமே உயர்ந்துள்ளது. இது, ஜுலை மாதத்தில் 2.81 சதவீதம் உயர்ந்து இருந்தது.

<u>சில்லறை விலை பணவீக்கம்</u>

ஆகஸ்டு மாதத்தில் சில்லறை விலை பணவீக்கம் 9.52 சதவீதமாக குறைந்துள்ளது. இது, ஜுலை மாதத்தில் 9.64 சதவீதமாக இருந்தது. வெளிநாடுகளில் இந்த பணவீக்கத்தின் அடிப்படையில்தான் ரிசர்வ் வங்கியின் பணக் கொள்கைகள் நிர்ணயம் செய்யப்படுகின்றன. அதேசமயம், நம் நாட்டில் மொத்த விலை பணவீக்கம் அடிப்படையில்தான் முக்கிய கடன் வட்டி விகிதங்களில் மாற்றம் செய்யப்படுகிறது.